5. அறிவிப்புகள்.

(அ) மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏராளமான கவன ஈர்ப்புத் தீர்மானங்களை விதி 55-ன் கீழ் என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அவை அத்தனைக்கும் பதில் பெறுகிற முயற்சியில் பேரவைத் துறை ஈடுபட்டு இருக்கிறது. இந்த விதிகளின்படி, ஒருநாளைக்கு இரண்டு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைத்தான் அவையில் எடுத்துக் கொள்ள முடியும். அந்த வகையில், இரண்டு இரண்டு தீர்மானங்கள் தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இருந்தாலும் எடுக்கப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கவனிக்கப்படாமல் போய்விடுமோ என்கிற கவலை எந்த உறுப்பினருக்கும் இருக்க வேண்டியதில்லை.

இன்று வரையிலும் துறைக்கு வந்திருக்கிற பல்வேறு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இன்றைய அஜென்டாவிலே சேர்த்தது எடுத்துக் கொள்ளப்பட முடியவில்லை என்று சொன்னாலும்கூட, அவைகள் அவையில் வைக்கப்பட்டுள்ளன என்பதை அறிவீர்கள். அந்த வகையிலே ஏறத்தாழ 14 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், சோ. இராசாராமன், என். டன்னீர் செல்வம், எஸ். அண்ணாமலை, கே. சிங்காரம், சி. ஞானசேகரன், ஏ. சுப்புரத்தினம், ஆர். சிங்காரம், கே. ஆர். முருகானந்தம், ம. சின்னசாமி, கோ. பழனிச்சாமி, சி. ஞானசேகரன், எஸ். எஸ். ராமசுப்பு, சா. பன்னீர்செல்வம், டோளூா வரதன், பெ. பொன்னுசாமி, ஆர். சிங்காரம், எ. சம்பத, எஸ். எஸ். ராமசுப்பு, திருமதி ரமணி நல்லதம்பி, எஸ். ஆர். ஜெயராமன், டாக்டர் தே. குமாரதாஸ், வி. நடேசன் பால்ராஜ், செ. ரகுபதி, கே. சிங்காரம், வ. சத்தியமூர்த்தி ஆகிய உறுப்பினர்கள் கொடுத்தது இன்று அவையில் வைக்கப்பட்டு உள்ளது. மீதம் இருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும் பதில் வந்தவுடன், உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.